**மாகாண வீதிகள் அபிவிருத்திச் செயற்திட்டம் (மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்கள்) 2010 செப்டெம்பர் 01 இலிருந்து திசெம்பர் 31 வரை**

**1. அபிப்பிராயம்**

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த நான்கு மாத காலத்திற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்), கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2 நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், 2010 செப்டெம்பர் 01 இலிருந்து திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டுக் காலத்திற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா. 15,153,310 ஆக இருந்தது. 2010 செப்டெம்பர் 01 இலிருந்து திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டுக் காலத்திற்கான செலவினத்தின் பொழிப்பு பின்வரும் கூற்றில் தரப்படுகின்றது.

| செலவின விடயம் | 2010 செப்டெம்பர் 01 இலிருந்து திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டுக் காலத்திற்கான செலவினம் |
|---|---|
| | ரூபா |
| தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 225,919 |
| கடப்பாட்டுக் கட்டணங்கள் | 1,991,198 |
| நிர்வாகக் கிரயம் | 12,936,193 |
| மொத்தம் | 15,153,310 |

### 2.2 விசேட (யென்) கணக்கு

2010 செப்டெம்பர் 01 இலிருந்து திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டுக் காலத்திற்கான விசேட (யென்) கணக்கில் எவ்வித கொடுக்கல் வாங்கல்களும் இடம்பெறவில்லை.

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் செயற்படு திகதி 2010 யூலை 14 இலிருந்து ஆக இருந்த போதிலும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2010 செப்டெம்பர் மாதத்திலேயே தொடங்கப்பட்டிருந்தது.

(ஆ) இலக்குகளை அடைந்து கொள்வதற்குப் பொறுப்பாக உள்ள உத்தியோகத்தர்களுடன் காலாண்டு, அரையாண்டு மற்றும் வருடாந்த ரீதியாக நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகளைச் சுட்டிக்காட்டி குறித்த செயற்திட்ட காலத்திற்குள் செயற்திட்டத்தின் குறிக்கோள்களை அடைந்துகொள்வதனை உறுதிப்படுத்துவதற்காக முழு செயற்திட்ட காலத்தினையும் மேவும் வகையில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், அத்தகைய திட்டம் செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) செயற்திட்ட விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்ட காலத்தின்படி 2010 செப்டெம்பர் இறுதியளவில் ஐந்து சிவில் ஆலோசனையாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், இந்த நியமனங்கள் 2011 யூலை 31 வரை கூட செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 3 ஆம் பிரிவின்படி, மீளாய்வாண்டிற்குட்பட்ட காலத்திற்கு 103 நாட்களிற்காக செலுத்த வேண்டிய ரூபா 3,536,095 தொகையான கடப்பாட்டுக் கட்டணங்கள் அறிந்துகொள்ளப்பட்டு கணக்கிற்கு கொண்டு வரப்பட்டிருகக்கவில்லை.